

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 156 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கலையரங்கம், விடுதிகள், உள்விளையாட்டு அரங்கங்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் த.ஆபிரகாம், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### உயர்கல்வித் துறை சார்பில்

# ரூ.156.05 கோடியில் கல்விசார் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, அக். 30 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.10.2024) தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறை சார்பில், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் 156 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், கலையரங்கம், விடுதிகள், உள்விளையாட்டு அரங்கங்கள், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கான கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டில் உயர்கல்வியை மேம்படுத்தும் நோக்கில், அதிக எண்ணிக்கையிலான உயர்கல்வி நிறுவ னங்களை தொடங்குதல், அதன் வாயிலாக ஆராய்ச்சி, புதுமைப்படைப்புகள், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் மாணவர்களின் திறன்களை வளர்த்து, வேலைவாய்ப்பினை உறுதி செய்தல், "நான் முதல்வன்" திட்டத்தின் மூலம் தகுதிவாய்ந்த திறன்மிகு இளைஞர்களை உருவாக்குதல், அரசுப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்த மாணவிகள் உயர் கல்வி பயில புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.1000/ உதவித் தொகை வழங்குதல், முதல் தலைமுறை பட்டதாரிகளுக்கு சலுகைகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருவதால் அகில இந்திய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு முதலிடம் வகித்து வருகிறது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள் வரை உயர்கல்வித் துறை சார்பில் 778 கோடி ரூபாய் செலவிலான கல்விசார் கட்டடங்கள் கட்டப்பட்டு, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, இன்றையதினம் முதலமைச்சர் அவர்களால் உயர்கல்வித் துறை சார்பில் கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட கட்டடங்களின் விவரங்கள்:

**உயர்கல்வித் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்கள்**

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 14 கோடியே 19 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவிலும் மற்றும் கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில், டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு 7 கோடியே 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கல்லூரிக்கான புதிய கட்டடங்கள்;

சென்னை, தரமணி மையத் தொழில்நுட்ப வளாகத்தில் அமைந்துள்ள அச்சு தொழில்நுட்பப் பயிலகம், நெசவு தொழில்நுட்ப கல்லூரி, தோல் தொழில்நுட்பப் பயிலகம், வேதியியல் தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் மாநில வணிகக் கல்வி பயிலகம் ஆகிய ஐந்து சிறப்பு நிறுவனங்களில், 49 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஆய்வகக் கட்டடங்கள், வகுப்பறைகள், முதல்வர் அறைகள், தேர்வு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் கல்விசார் கட்டடங்கள்;

சென்னை, தரமணி, டாக்டர் தர்மாம்பாள் மகளிர் பலவகை தொழில்நுட்பக் கல்லூரியில் 18 கோடியே 18 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள விடுதிக் கட்டடங்கள்;

மதுரை மாவட்டம், அண்ணா பல்கலைக் கழக மண்டல வளாகத்தில் 15 கோடியே 65 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மாணவர் விடுதிக் கட்டடங்கள்;

திருநெல்வேலி அரசு பொறியியல் கல்லூரி வளாகத்தில் 7 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கலையரங்கக் கட்டடம்;

பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 65 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவிலும், வேலூர், தந்தை பெரியார் அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 65 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் செலவிலும், போடிநாயக்கனூர், அரசு பொறியியல் கல்லூரியில் 8 கோடியே 66 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் செலவிலும் மற்றும் காரைக்குடி, அழகப்பா செட்டியார் அரசு பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரியில் 8 கோடியே 67 இலட்சத்து 98 ஆயிரம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள உள்விளையாட்டு அரங்கங்கள்;

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் 4 கோடி ரூபாய் செலவில் உடற்கல்வி துறைக்கான தரைதள கட்டடம் மற்றும் நுண்கலை துறைக்கான முதல் தளக் கட்டடம்;

திண்டுக்கல், எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக் கல்லூரியில் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 10 ஆய்வகக் கட்டடங்கள்;

என மொத்தம் 156 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உயர்கல்வித்துறை கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உயர்கல்வித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே.கோபால், தொழில்நுட்பக் கல்வி ஆணையர் த.ஆபிரகாம், கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தாராபுரம் நகராட்சி மற்றும் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.9.76 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர்!

தாராபுரம், அக். 30-

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் தாராபுரம் வருவாய் கேட்டாட்சியர் ஃபெளிக்ஸ் ராஜா தலைமையில், தாராபுரம் நகர்மன்றத் தலைவர், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்புக்கண்ணன், தாராபுரம் ஒன்றியக்குழு பெருந்தலைவர், ஒன்றியச் செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், நகர கழக செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் 21.10.2024 திங்கட்கிழமை அன்று திருப்பூர் மாவட்டம், தாராபுரம் நகராட்சி, திருப்பூர் சாலை வார்டு எண்.2ல் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் ரூ.26.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சமுதாயக் கழிப்பிடத்தை திறந்து வைத்து, அலங்கியம் சிக்னல் தென்புறம் 30 வது வார்டு ஆலடிக்களத்தில் தூய்மை இந்தியா 2.0 திட்டத்தின் கீழ் ஆலடிக்களம் பாதை முதல் வடக்கு எல்லையான காமராஜபுரம் வரை ராஜவாய்காலின் பக்கவாட்டில் வடிகால் அமைத்து கழிவு நீர் சேகரிப்பு கிணறு ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் அமைக்கும் பணியினை துவக்கி வைத்து, தாராபுரம் ஒன்றியம், சின்னப் புத்தூர் ஊராட்சி, சத்திரத்தில் கே771 சின்னப் புத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் சார்பில் புதியதாக கட்டப்பட்ட கூட்டுறவு மருந்தகத்தினை திறந்து வைத்து, பொன்னாபுரம் ஊராட்சி, பொன்னாபுரத்தில் டி.டி.2 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தினை திறந்து வைத்து பயனாளிகளுக்கு பல்வேறு கடனுதவிகளுக்கான ஆணை களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தலை மைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், மாவட்ட துணை செயலாளர், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, கூட்டுறவு சங்கங்களின் துணை பதிவாளர் பழனிச்சாமி, தாராபுரம் நகராட்சி ஆணையாளர் திருமால் செல்வம், நகராட்சி பொறியாளர் சுகந்தி, தாராபுரம் நகர்மன்றத் துணைத் தலைவர் ரவிச்சந்திரன், தாராபுரம் ஒன்றியக்குழு துணைத் தலைவர் சசிகுமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சன் பாலு, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் செல்லமுத்து, பொதுக்குழு உறுப்பினர் சிவக் குமார், தாராபுரம் ஒன்றிய கழக துணைச் செயலாளர் செல்வகுமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக, வார்டு கழக, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், துறை சார்ந்த அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக 75 வது பவளவிழா ஆண்டை முன்னிட்டு தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க மற்றும் சென்னை கற்பக விநாயக மருத்துவக் கல்லூரி, கற்பக விநாயக பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச மெகா சிறப்பு மருத்துவ முகாம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வைஷ்ணவி மஹாலில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா தலைமையில் தென்காசி மக்களவை உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. முகாமில் நோயாளி ஒருவருக்கு கண் சிகிச்சை அளிக்கப்பட்டது. உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தங்கவேலு, சதன் திருமலை குமார் எம்.எல்.ஏ., மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பகவிநாயகம், மாவட்ட ஊராட்சி மன்ற குழுத் தலைவர் தமிழ்ச்செல்வி, ஒன்றியச் செயலாளர் லாலா சங்கரபாண்டியன், ம.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் ராஜேந்திரன் உள்பட பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அண்ணா தமிழ்க் கழகத்தின் பொன்விழா வில் மாநில கழக தணிக்கைக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் வே.காசிநாதனுக்கு அண்ணா விருதினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார். உடன் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் வே.வேங்கடபதி, முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் ஆகியோர் உள்ளனர்.

### 2026 - சட்டமன்றத் தேர்தலில்

# 200 தொகுதிகளை கைப்பற்றி மீண்டும் கழக ஆட்சி!

## திண்டுக்கல் கிழக்கு மாவட்டக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் - ஐ.பி.செந்தில்குமார் உறுதி!



திண்டுக்கல், அக். 30 -

2026 ஆம் சட்டமன்ற தேர்தலில் 200 தொகுதிகளை கைப்பற்றி மீண்டும் கழக தலைவரை ஆட்சியில் அமர வைப்போம் என்று திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார் தி.மு.க. நிர்வாகிகள் மத்தியில் பேசினார் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் உள்ள அறிஞர் அண்ணா கூட்டம் அரங்கில் நடைபெற்றது கூட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் காமாட்சி தலைமை தாங்கினார் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால்உசேன், மார்கிரேட் மேரி, மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இரா. தண்டபாணி, ஆத்தூர் க. நடராஜன், கனகதுரை, ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிலக்கோட்டை தொகுதி பொறுப்பாளரும் கொள்கை பரப்பு குழு துணைச் செயலாளருமான கம்பம் ஆர்.பாண்டியன், திண்டுக்கல் தொகுதி பொறுப்பாளரும் மாநில நெசவாளர் இணைச் செயலாளருமான எம். கோவிந்தசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கலந்து கொண்டு நிர்வாகிகள் மத்தியில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார் பேசும் போது


பேரறிஞர் அண்ணாவால் தொடங்கப்பட்ட தி.மு.க. என்ற இயக்கம் கழகத்தலைவர் தமிழக முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய செயல்பாட்டால் ஆலமரம் போல் தளைத்து இன்று விண்ணுயர்ந்து நிற்கிறது. அடிமட்ட தொண்டனுக்கும் பாதுகாப்பாக இருப்பது தி.மு.க. என்ற பேரியக்கம் தான் அதனால் தான் இந்த இயக்கம் (தி.மு.க.) ஐந்து தலைமுறைகளை கண்டுள்ளது. 2024ம் வருடம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாம் எப்படி 40/40 தொகுதிகளில் வெற்றிக் கனியை பறித்து நமது கழகத்தலைவர் கையில் கொடுத்தோமோ அதுபோல வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200 தொகுதிகளில் மாபெரும் வெற்றிபெற்று வெற்றிக்கனியை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கையில் வழங்க வேண்டும் மீண்டும் கழக தலைவரை ஆட்சியில், அமர வைத்து வரலாற்று சாதனை படைக்க வேண்டும் இதற்கு ஒவ்வொரு தி.மு.க. தொண்டனும் 2026 சட்டமன்றத் தேர்தலில் அயராது உழைக்க வேண்டும் அதற்கு நிர்வாகிகள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார் வரும் ஜனவரி மாதம் முதல் நமது கழகத் தலைவரும், இளைஞர் அணி எழுச்சி நாயகனும் துணை முதல்வரு மான, உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அதிரடி நடவடிக்கைகளை எடுக்க உள்ளார்கள் அதற்கு நீங்கள் அனைவரும் தயாராக இருக்க வேண்டும் காரணம் கட்சி கட்டுப்பாடு மீறும் நபர்கள் ,மாற்றுக் கட்சியுடன், தொடர்பு வைத்திருக்கும் நபர்கள், கட்சிக்கு விரோதமாக செயல்பட நபர்கள் மீது , நடவடிக்கை எடுக்கப்படும் ஆகையால் இன்றிலிருந்து நீங்கள் கட்சி கட்டுப்பாடுடன் செயல்பட்டு கட்சியின் வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

நிர்வாகிகள் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர்கள் ரெட்டியார்சத்திரம் ப.க. சிவகுருசாமி, திண்டுக்கல் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், ரெட்டியார் சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, கொடைக்கானல் கீழ்மலை செயலாளர் வி.எம்.ஏ.கருமலை பாண்டி, மேல்மலை செயலாளர் என்.வி.இராஜதுரை, பழனி கிழக்கு ஒன்றிய செயலாளர் க.சுவாமிநாதன், திண்டுக்கல் மாநகராட்சி வணக்கத்திற்குரிய மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயரும்; மாநகராட்சி செயலாளருமான ராஜப்பா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.அஸ்வின் பிரபாகரன், இளைஞரணி அமைப்பாளர் மா.கணேசன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ப.ராஜேஸ்பெருமாள், மாயக்கண்ணன், மணலூர் மணிகண்டன் மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் குட்டி (எ)துரைப்பாண்டி, முத்துக்குமார், கன்னிவாடி பார்த்தசாரதி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.அக்பர், இளங்கோவன், மூர்த்தி, சுப்ரமணி, திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் கிழக்கு பகுதிசெயலாளர் அ.ராஜேந்திர குமார், வடக்குபகுதி செயலாளர் சி.ஜானகிராமன், தெற்கு பகுதி செயலாளர்கள் மா. சந்திரசேகரன், மேற்கு பகுதி செயலாளர் ப.பஜ்லுல்ஹக், பழனி மாநகர செயலாளர் ஆ.வேலுமணி, கொடைக்கானல் நகர செயலாளர் எஸ்.முகமது இப்ராஹிம், பேரூர் கழக செயலாளர்கள் ஸ்ரீராமபுரம் ராஜா, அகரம் இல. ஜெயபால், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர்கள் பொன்முருகன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன், விடுதலை முருகன், பஞ்சம்பட்டி மணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், திண்டுக்கல் பகுதி செயலாளர்கள் சி.ஜானகிராமன், அ.இராஜேந்திர குமார், மா.சந்திரசேகரன், திண்டுக்கல் மேற்கு பகுதி செயலாளர் ப.பஜுலுல் ஹக், பேரூர் கழக செயலாளர்கள் ஸ்ரீராமபுரம் ராஜா, சித்தையன்கோட்டை சக்திவேல், அய்யம்பாளையம் தங்கராஜ், சின்னாளப்பட்டி மோகன்ராஜ் பேரூராட்சி மன்ற தலைவர்கள் சின்னாளபட்டி பிரதீபா கனகராஜ், கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் சகிலாராஜா, அய்யம்பாளையம் ரேகா அய்யப்பன், அகரம் நந்தகோபால், தாடிக்கொம்பு கவிதா சின்னத்தம்பி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லை சுபாஷ், ஜான்பீட்டர், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், ஊராட்சிமன்ற நிர்வாகிகள், தி.மு.க. சார்பு அணி நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், உட்பட தி.மு.க.வினர் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னை தீனன்

### அக்டோபர் 30 (1977)



**சென்னை, சைதாப்பேட்டை, முனியப்பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த இவர், இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு தீவிரமாகப் பணியாற்றியவர்.**

**1977ஆம் ஆண்டு அக்டோபர் 30ஆம் நாள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் அறிவித்ததற் கிணங்க, சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் கறுப்புக் கொடி ஏந்தி களம் கண்டபோது, அன்றைய ஆட்சியாளரின் காவல்துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**